உ

மாரியம்மன் துணை.

# பழனிஸ்தலம் மாரியம்மன்

# நூதனச்சந்தக் கும்மி.

முதற்பாகம்.

இஃது

ஷையூரில்

லைகும்பல நண்பர்கள் வேண்டுகோளின்படி

ஷையூர்

தேவஸ்தானம் மலைக்கோவில் கந்தபுராணஸ்தானீகமும்

சிங்கார விலாசக்கோலாட்டக் கம்பெனி உபாத்தியாயருமான

**சு. ஆறுமுகபண்டாரம்.**

இயற்றியது

ஷையூர்

ஜேய்ஸ் & கம்பெனியார் அவர்களால்

தாராபுரம் புஸ்தக ஷாப்.

**அ. முத்துசாமி நாயுடு அவர்களது**

ஸ்ரீசாமுண்டீஸ்வரி அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

---

ரைட் [இதன் விலை அணா 1.]

O-,85MAM,P
N13
146891

உ

ஸ்ரீமாரியம்மன் துணை.

# சந்தக்கும்மி.

## முதற்பாகம்.

### விநாயகர் காப்பு வெண்பா.

சீரார் திருப்பழனி க்ஷேத்திரத்தில் வீற்றிருக்கும்
தாரார் மகங்குலவு தாய்புகழைத்—தாரணியில்
சந்தம் பெறக்கும்மிச் சாற்றக்கணபதி பொற்
கந்தக்கழலிருதாள் காப்பு.

### குறிப்பு.

தான தான தான தான தான தான—தானனு. தன
தான தான தானனு—தன
தான தான தான தான தான தான தானனு

### தெய்வ வணக்கம்,

புண்ணியர்கள் போற்றுகின்ற பூட்கைமுக வல்லவா
அருள்—வாழ்க்கை தரும்நல்லவா—உந்தன்
பொன்னடிகள் போற்றியம்மன் புகழ்க்கும்மியைசொல்லவே.

தண்ணீர் சூடும் சம்புடனேயம்பிகையாள் காப்பு
விண்டுத்தம்பி ரானுங்கள் காப்பு—செய்ய (2)
தாமரை மலரில் வைகுந்தாக்கணங்குங் காப்பு

வக்கிராங்க நாதனோடு தக்கவாணி காப்பு—அருள்
மிக்க வேலன் காப்பு—வளர் ([illegible]
வள்ளிதேவயானையாரு மகிழ்ச்சியாகக் காப்பு

உக்கிரன் முத்தனிருநிதிக்கிழவன் காப்பு—நாகைச்
சக்கிரனுங் காப்பு—நிறை ([illegible]
உத்தமியிந்தராணியோடு சத்தகன்னி காப்பு

சூலி சூரி சூராம்பை சுந்தரியாள் காப்பு நல்ல
ருந்ததியாள் காப்பு—மேல
சுகபதவிப்பேற்றை நல்கும் பகவதியும் காப்பு (5)

146891

மேலினு மேலான தேவிமாரித்தேவி காப்பு அவள்
பராச்சூலங் காப்பு—மேன்மை
விளங்குமாயிரங் கண்களின் மிகுங்கருணை காப்பு (6)

அய்யனூர் நமனுடனே அமரர்களுங் காப்புத் திசைக்
குமரர்களுங் காப்பு—யென்னை
யன்போடாளு மஷ்ட லக்ஷ்மியார் பாதமுங் காப்பு (7)

வெய்யவனிலாக்கு சன்மால் வேந்தன் வெள்ளி காப்பு
அன்றமேந்த னீலன் காப்பு நீண்டு
விளங்கு ராகு கேது மற்ற வேணதெய்வங் காப்பு. (8)

## ஸ்திரீ புருஷ வினாவிடை.

### நாட்டுச்சிறப்பு.

ஆண்:— ஆசைநேச மாதே மிக்க வன்புள்ளமானே
அளவிலா நன்குள்ளதேனே நான்
அறைவதைக்கேளிரு செவியிலுமமைவுறத்தானே (1)

பெண்:— நேசாவென்ன வாச்சரியம் நிகழ்ந்ததையோது
யெந்தனுளா மகிழுவிப்போது ஒரு
நிகரில்லாத பெருமை வாழின்னீள்புவி மீது (2)

ஆண்:— மாதரசே நற்பழனி மாநகரமார் அழகிய
மாரியம்மையார் மிக்க
மகிமையுச்சவ மதனைத்தெரிய வழுத்திவாரேன் பார் (3)

பெண்:— காதலனேநான் சந்தோஷக்கடலிலாழ்ந்தேனே
இதோ தங்கள் காலில் வீழ்ந்தேனே யெந்தன்
கருத்திலமைய விருத்தியாயதைக் கழறிடத்தானே (4

ஆண்:— கழறுமேனலமாயானால் காணுமின்னாட்டின்
வளத்தொடு மாணுறும் பேட்டின் வளக்
காட்சிபதனைக் கிளத்தியன்னமே கவினே நன்மாட்டின் (5)

பெண்:— கொழுநனேயப்படியானாற் கூறக்கேட்கிறேன்
கவனமேன்மிறக் கேட்கிறேன் இந்த
குவலயந்தனில் வியப்பைக் கேட்கக்கோருமாது நான் (6)

ஆண்:— கேணிமாதே காரொளியாய்க் கிளம்பிச்சென்றமே
அன்னவத்தின் கிரமொண்டுமே நீலக்
கிழமையாகியம்பரத்துக்கேகிமண்டுமே (7)

பெண்:— காணிக்கையா யோதுகின்ற கமலப்பொற்றாளா
அழகிய கத்திகை நற்றோளா சொன்ன
கார்மேகமெல்லெல்லை மண்டுங்கழறுங்கண்ணாளா (8)

ஆண்:— மாணிக்கமே யின்னாட்டில் வாரகவிண்டிண்டு
அதனிலே வந்து திரண்டு கன
மழையினை வருஷிக்குமவ்விதமுண்டு (9)

பெண்:— பாணிதச்சுவை செறிந்தபன்னல் கொண்டோனே
செந்தமிழின் பூஷைகயுண்டோனே பெய்த
பானியம்பாயுமிடத்தைப் பகருங்கண்டோனே (10)

ஆண்:— வாவியாறு கேணிவீழ்ந்து வந்து நஞ்சையும் புயிர்க
ளமைந்த புஞ்சையும் வெகு
வாகக்கந்தமாண்பு மாக்கமலிந்திடப்பாயும் (11)

பெண்:— காவலனே கேட்டபோதே மேவுமானந்தம்
அதற்கு மேலாம் பிரமானந்தம் என்றால்
கணக்கில்லை சிறந்த வின்பைக்கலந்தேனானந்தம் (12)

ஆண்:— ஓவியமே கேளிதன்று முரைக்கிறேனின்னும்
யெந்தனாவில் சிறக்கவுன்முன்னம் இங்கு
உலகிலே சிறந்த சென்னலோங்கியே மன்னும் (13)

பெண்:— ஆவிக்கினியான யெந்தன் அருளுள்ளமன்னா அன்னெல்
வகை யானதைச்சொன்னா லெனக்
கானந்த மிகுந்து சேருமறிவாய் விற்பன்னா (14)

ஆண்:— மணியன் குருவை வகைரா வாணம்
வாலனும் கோடை மணக்தரும் வளச்சம்பா வீடை இந்த
வையகம் சொல்ல மயங்கும்வசனித்தேன் சாடை

ஆண்:— துணிந்திடில் நெல்லின் வகையை தோகையே தொகை
அளவிலே ஆகையால் திகை உள்ளம்
தோன்றுமின்னும் வேறுகாட்சி சொல்கின்றேன் நகை (16)

பெண்:— மன்னவரே நன்றாயிங்குமருவும் சோலையில்
வளர்ந்திடு மரங்கணீளொயில் அதை
வழுத்தவேணு மெந்தனுள்ள மகிழ நின்வாயில் (17)

ஆண்:— பன்னியே சம்பாஷிக்கிறேன் பண்புடன் கேளும்
வெகுகனவின்பிணையாளும் இந்த
பழனி நாட்டில் மருவும் ரஞ்சிதப் பலமரங்களும் (18)

பெண்:— ரமணியமிகுந்த யெந்தனுதனே காமா அழகிய
நாமா னேபூமா உந்தன் நாவிலே உதிக்குஞ்சொல்லுக்
கிணையிங்குண்டாமா (19)

ஆண்:— கமுகு தெங்கு பலவு மாம்பல் கதவி மாமரம்
சம்புகிம்பங் கதம்பங்கன்மாம் நாகம்
கண்டல் கன்னலோடிருக்குங் கணவகன்மரம் (20)

பெண்:— இமைப்பொழுது மாறுதெந்தனிருக்கையுற்றவா
கனத்தினிற் பெருக்கையுற்றவா இன்னு
இருக்கு மரத்தை தெரிந்தவனாயிலியம்பு முற்றவா (21)

ஆண்:— ரமணியே சம்பாஷிக்கிறேன்நாயகியுமையாள்திருமக
மாயி துணையால் இன்னு நாடிய விரு
க்ஷஜாதி யதனைநன்கு கேள் (22)

பெண்:— பத்தினி பராபரியாள் பழனி வாழ்பவள் அனுதின
மெனையுமாள்பவள் அவள் யாதாரவிந்தத்துணையால்
நாதனே நீசொல் (23)

ஆண்:— அத்தியாத்தியித்தி கோலியழகு பாதிரி
கன்னிகாரம் அகத்தி நாகரி நல்ல
அதிங்கம்வேங்கையோடிருக்கும் அருச்சனம் வேரி (24)

பெண்:— பர்த்தாவே யின்னுமிந்தநற் பாரிய நாட்டில்
வளர் செடிக்கூரிணையும் நல் வாசப்
பனிதவழ்மலருறும் பெருமையும் பரிவுடனீ சொல் (25)

ஆண்:— உத்தமியே யித்தலத்தில் நித்தமெத்தவே
அழகியசித்தமுத்தவே உனக்
கிசைத்துவாரேன் பத்தியாய்க் கேளெங்கு மெத்தவே (26)

விம்பம் யாவிரித்தும்பை கத்திரி விளங்குங்குல்லையும்
முந்திரி யுந்துளவோடல்லியும் நல்ல
சிம்புறுஞ் சம்பீரமோடு சிறந்த வல்லியும் (27)

அம்புயப்பூவிக் துளப்பூவரளி மாப்பூவும்
மல்லிகைப்பூ மந்தாரப்பூவும் உய
ராஞ்சண்பகமருக்கொழுந் தோடணங்கநத் பூவும் (28)

இன்னும் பல வான ஜாதியிரு மரங்களும்
அழகிய கொடி செடிகளும் பூவும்
யிருக்குமிதிலே பொருக்கப்புள்ளின மிணைந்துமே வாழும் (29)

பெண்:— மன்னவரே கேட்கக்கேட்கக் கன்னலாகுதே
ஆனந்தப்ரசன்னமேவுதே இந்த
மண்ணிலே யெண்ணிலாத வுன் மகிழ்வுண்டாகுதே (30)

ஆண்:— பன்னியிதைப் பார்க்கப்பார்க்கப் பசியுண்டாகுமோ
பேராநந்திப்பதுவும் போகுமோ இதில்
பறவைக்கூட்ட மிருகக் கூட்டம் பலவும் நீங்குமோ (31)

பெண்:— சொன்னபோதே வெண்ணிலாத ஷோக்குண்டாகுதே
யெந்தன் மன தூக்கம் பூண்டதே மன்றே
பன்னிவாரும் வாக்கை யெதிர்பார்த்துள் வேண்டுதே (32)

ஆண்:— அன்றியுங்கேளிந்த நாட்டி லணைந்தவைகளை ரஞ்சிதமா
யிணைந்தவைகளை நல்ல ஆயிழையே
மொழிகிறேன் நன்றாக விங்கேவளை (33)

பெண்:— நன்றியோயதனை நன்றாய நவிலுங் கேட்கிறேன்
யெந்தனுள மகிழ்ந்து கேட்கிறேன் இந்த
நாகரீகமான பூவில் நலமுறவே நான் (34)

ஆண்:— ஆறுறு நூறுருடனேயட்டமங்கலம்
நகையிலங் கிட்டபிங்கலம் திரு
ஆவினங்குடி பன்றியங்கிரி யமர்ந்தும்பன்னலம் (35)

வீறுறுபூம்பாறையினோடம் மிடும்பமலையும்
பழனியில் மேவுமலையும் மிக்க
விளங்குமேனமலையும் செண்டாரிலங்கும் பள்ளியும் (36)

மன்னியவைகாபுரி நன்வாவிதானுண்டு
அதினோடு வாவிபல்லுண்டு அன்றும்
துன்னியநீள் கூபங்களின்றுருவங் கூருண்டு (37)

இன்னும் பலவானவைகளிருக்குதச் சுழல்
அழகிய கருப்புறுங்குழல் மாதே
யெடுத்துச்சொல்லத்துலையாதிந்த வீடுறும்புவில் (38)

பெண்:— கேள்வனே நன்றாய்ச்செழி வளங்கேட்டேனின்னமும்
விலங்குப்புள் கூட்டவண்ணமும் சற்று
கிளத்தியெந்தனுளத்திலின் பிணைவளர்த்திடவேணும் (39)

ஆண்:— வாள்வழியே வழுத்துகிறேன் கேள் கொடுவரி
தந்திமந்தி நீள்திளைப்பரி நின்றும்
வாகுகோவுடன் மகிடம் வருடைமான்கரி (40)

ஓதியாளி ஓரியூளன் உளியங் கீரியும்
கலைகரம் ஒந்திமூஞ்சுரம் ஆகு
வோடணில்முயல் வேசரியோங்குகாளையும் (41)

ஓதிய விச்சாலத்தினோடுலவுமநேக
அழகிய விலங்குகள்போக முற்று
மொன்றோடொன்று நேசமாறு தோற்றுமையாக (42)

இன்னும் கேளும் பன்னியே நல்
லிந்த பக்கத்தின் மருவுசகுந்தக் கூட்டத்தின்
மிக்க இனிய வளத்தை தெரியப்படுத்தி இன்பமாக்கின்றேன்

பெண்:— மன்னவனே சொல்லிவாறு மகிழ்ந்து கேட்கிறேன்
நன்னயமாய்ப் புகழ்ந்து கேட்கிறேன்
இந்த வயனிலே வளர் புள்ளின வளத்தை நன்குநான் (44)

ஆண்:— மயில்களாட குயில்கள் கூவும்; வண்டினங் கூடும்
மதுதனை உண்டுமே பாடும் உயர்
வன்னிபேசவன்னங் கேட்டுத்துன்னியே நாடும் (45)

வயலிலே யிருந்து வாழும் வன்னக் கொக்குகள்
கம்புளுள்ளான் உன்னநாரைகள் கூட
வனத்தகாடை கௌதாரி மைனா வானம்பாடிகள் (46)

இன்னும் வேண்டிய பறவையிணைந்து வாழ்ந்திடும்
இந்த நாட்டிலணைந்து வாழ்ந்திடும் யெந்த
னிருகண்மணியே இனியகனியே பெருமதர்ப்பொடும். (47)

## நகரச்சிறப்பு.

பெண்:— அன்பனே மன்மகிழ்ந்தேனையாலினி
யழகிய வாகைபழனி நகர்
அமைந்த வளத்தைத் தெரியப்படுத்தும் மடியாள் மாட்டினி

ஆண்:— ஆனந்தமாயோதி வாரேனன்புடன கேளாய்
யெனது நல்லின் புறுந்தோளாய் நல்ல
ஆயிழையே நகர்வளத்தை யானதிமேலாய் (49)

மானமே சிறந்த நல்லவாகையுற்றதும்
அகண்டிடும் வாயலுற்றதும் அந்த
வானவர் மகிழ்ந்து போற்றும் கோவிலுற்றதும் (50)

மாநிலம் புகழுந் தெண்டபாணி கோவிலும்
தளிர்கங்கை வேணிகோவிலும் இன்னும்
மண்டியவநேக தெய்வ வாசக கோவிலும் (51)

மேன்மை யதபோதனர்கள் மேவும் கோவிலும்
தனிமயமான கோவிலும் உண்டு
மான்விழி நிகாரனனி மாமதிபோலும் (52)

மேவிய பழநி நகர் வீதிச்சிங்காரந் தெருக்களின்
ஆதிச்சிங்கார மதை விருப்பமாயோதுறே
நன்மை விளங்கு மின்னேரம் (53)

பெண்:— ஆவிக்காவியான வெந்த னாகுள்ள மன்னா
வீதிகளினழகை முன் சொன்னால் இன்ப
மாருமாதலாற் சொலுவீரழகு விற்பன்னா (54)

146891
சென்னை-600 008.
146891



ஆகமாதியோதுகின்றவய்யர் வீதியும் அழகிய
சைவர் வீதியும் ஓங்கு
மருணகுலத்தவதரித்தவரசர் வீதியும் (55)

தோகையே கேளாய் வைசியத்தோர்கள் வீதியும் சந்தரகுலத்
தார்கள் வீதியும் மிக்கத்
துன்னும் விபசாயமார் வேளாளர் வீதியும் (56)

பெருமையிற் சிறந்த பெரியோர்கள் வீதியும் அறிவுடை
யார்கள் வீதியும் தெய்வப்
பிரபலஞ்சொல்லிக்கொண்டாடும் தருமர் வீதியும் (57)

திருவளர்சங்கீதக் கோஷ்டி திகழும் வீதியும் புலவர்கள்
புகழும் வீதியும் குக
தேசிகன்திருப்புகழ்ே சிறந்த வீதியும் (58)

பிள்ளைமார் பெருக்கமிக்கவுள்ள வீதியும் பலசெட்டிப்
பிள்ளை வீதியும் இந்தர
வள்ளல் கோத்ரம் விள்ளுந்தேவமார்கள் வீதியும் (59)

தெள்ளிய சேரர்பாண்டியர் சேர்ந்த வீதியும் சோளியர்க
ளார்ந்த வீதியும் மேழிச்
செழுமையகலாத கொங்கர் கூர்ந்த வீதியும் (60)

இங்கிதக்கவரய ரிலங்கும் வீதியும் வைணவர்
தங்கும் வீதியும் அந்த
யேர்மிகும் ரசபுத்திரர் துலங்கும் வீதியும் (61)

செங்குந்தமரபினர்கள் தங்கும் வீதியும் ஆரியர்பு
ளங்கும் வீதியும் பண்பு
சிறந்தகம்மவாரு நாய்க்கர் சேர்ந்த வீதியும் (62)

மெய்காணு மாமாத்தியர்கள் மேவும் வீதியும் சோதிடச்சொன்
னவர் வீதியும் புகழ்
மீறியவிஞ்சையர்களளாவும் வீதியும் (63)

செய்கையிற்றெளிந்த நல்ல சித்பர் வீதியும் தபதியச்
சிற்பர் வீதியும் அந்த
சிற்பருக்குபதேசஞ்செய் தேர்ந்தோர் வீதியும் (64)

தச்சிதமார் பட்டுநூலுக்காரர் வீதியும் தேவாங்கத்
தீரர் வீதியும் மாமார்க்
கண்டகோத்ரமான சேண்யகாரர் வீதியும் (65)

மெச்சுமரவேலைசெய்யுந் தச்சர் வீதியும் பொன்னணிசெய்
தயிர் வீதியும் கஞ்ச
மின்னார் பாத்திரங்கள் வார்க்குங் கன்னார் வீதியும் (66)

காரியத்தைக்கைவிடாத கணக்கர் வீதியும் அசத்பொரு
ளிணக்கர் வீதியும் பல
கண்காட்சிகள் நித்த நித்தம் காணும் வீதியும் (67)

பாரியமும் மதயானைப்பாகர் வீதியும் நற்குதிரை
பாகர் வீதியும் இன்பப்
பாசாங்கிற்பணம் பறிக்கும் வேசி வீதியும் (68)

கொன்னையத்தைக்காய்ச்சி நீட்டுங் கொல்லர் வீதியும் விடாத
வில்லர் வீதியும் அடி
கோகிலமே கும்பஞ்செய் குலாலர் வீதியும (69)

அன்னமே கேண்மே தகாரர் துன்னும் வீதியும் நாடார்கள்
மன்னும் வீதியும பல
வாதிய தொழில்புரி பாட்டாளர் வீதியும் (70)

கணத்திலுமறக்கர் வாரக்காரர் வீதியும் நண்மணிய
காரர் வீதியும் சொன்ன
காரணமுறைக்குந் தூதுக்காரர் வீதியும் (71)

மணத்தோடாறுசுவை வட்டிக்குமடையர் வீதியும்
அழகிய இடையா வீதியும் எண்ணை
வகைவகையாய் விற்பனஞ்செய் வாணியர் வீதியும் (72)

மிக்கதையல்வேலைக்காரர் விளங்கும் வீதியும் அம்புபிடி
வேடர் வீதியும் ரூப
வேலையிற்கைதேர்ந்த சிற்பவிடையர் வீதியும் (73)

தக்கபுகட் சோனகர்கள் தங்கும் வீதியும் உப்பிலியச்
சங்கர் வீதியும் பகந்
தங்கமேயம்பலகாரர் பொங்கும் வீதியும (74)

மண்கல் வட்டத்தன்னுமான ஒட்டர் வீதியும் சுண்ணாம்பு
கட்ட வீதியும் பல
மாங்களைச்சங்கரிக்கும் போயக்கூட்டர் வீதியும் (75)

திண்மைமீன்பிடிக்கும் வறசெம்படவர் வீதியும் சாணா
அடர்கொள் வீதியும் மிக்க
திரண்ட வண்ணார்நாவிதர்கள் சேர்ந்த வீதியும் (76)

பேரிடியெனவடிதம் பட்டர் வீதியும் வள்ளுவர்கள்
திட்ட வீதியும் எங்கும்
பிரபலியக்குடவர் வாழப்பட்ட வீதியும் (77)

ஏர்ப்பிடி மிகுந்த பள்ளரிருக்கும் வீதியம் பறைக்குல
வருக்கர் வீதியும் மற்றும்
ஈனகுலபாக்களுள்ள சொருக்கள் வீதியம் (78)

இடை சிறுசகளினன்னியே இன்னும் பற்சாதி மனுக்
களின் துன்னிய வீதி உண்டு
இசைக்கப்பெருகும் கடைச்சிறப்பைபயியம்புறேன் பதி (79)

பெண்:— கடை வீதிச்சிறப்பை முற்றுங் கழறிடவேணும்
மன்னவனே கழறிட நானும் கேட்டு
கணக்கில்லாத வானந்தத்தில் கலந்திடவேணும் (80)

வண்ணவண்ணக்கறி செறிந்த வன்னக்கடையும்
பலவித வன்னக்கடையும் பல
வாய்ருசி சிற்றுண்டி மிக்க வாய்ந்த கடையும் (81)

விண்ணவரும் ஆவல்பூணுமிட்டாய்க் கடையும்
அப்பவகை சுட்டார் கடையும் எந்த
வேளையும் பலகாரங்கள் தட்டாக்கடையும் (82)

அவல்க்கடலை பொரிவகைகளமைந்த கடையும்
பல்பண்டம் சமைத்த கடையும் நா
மான சர்க்கரைகற்கண்டு சினியார்ந்த கடையும் (83)

மேவுமேலஞ் சாதிப்பத்ரிலவுங் கமுங்கிராம்பு
வால்மிளகுன் னதக்கத்தக்காம்பு இளம்
வெற்றிலைக்களிப்பாக் குடன் மிருதுச்சுண்ணும்பு (8

மிக்கமணப்புகையிலையும் மேலத்தடையும் சாக்கு
த்தாம் பூலக்கடையும் உண்டு
விளம்புறேன் கேண்மானே யினனும் விளங்குங் கடையும்

ங்கவர்க்க பட்டாடைகள் விற்குங்கடையும் பார்த்துப்
பார்த்துச சொக்கு டையும் நல்ல
பற்பீசுமுதலியவை வைத்த கடையும் (86)

நூதனக்காட்சிச் சாமான் வீதிக்கடையும்
புத்தகத்தி னு திக்கடையும் பாத்ரம்
கோங்கியபடி வகைகளோங்குங் கடையும் (87)

மேதினி விளங்கும் பஞ்சலோகக்கடையும் பலவணி
வாகுக்கடையும் பணம்
மேனுபவிர்த்திக்க வட்டிக்கு விற்குங்கடையும் (88)

மிக்கபோர்வைச் சால்வைபனியன் சொக்காய்க்கடையும்
பிளானல் வர்க்கக்கடையும் இன்னும்
வேண்டியவுல்லன் வகைகள் மிகுந்தகடையும் (89)

தக்ககோட்டு அங்கிசட்டை தைக்குங்கடையும்
யந்தரத்தையன் மிக்ககடையும் நல்ல
தரப்பாவாடை ரவிக்கைதாவணி சிறக்கும் கடையும் (90)

சந்தனஞ் சவாது புனுகுசார்ந்த கடையும் அத்தர் பன்னீர்
ஆர்ந்தகடையும் கந்தங்
தந்திடுஞ் சேர்வைவில்லை செறிந்த கடையும் (91)

விந்தையாங் கஸ்தூரிபத்தி விளங்குங்கடையும்
தயிலங்கள் துலங்குங்கடையும் இன்னும்
வேண்டுந்தேன்றிரவியங்கள் விற்குங்கடையும் (92)

மல்லிகைமருக்கொழுந்து முல்லைமாலையும் செவந்திப்பூ
நல்லமாலையும் இரு
வாட்சியுமனோரஞ்சித வர்த்தமாலையும் (93)
சொல்லிய வர்க்கப்பூமாலையுள்ள கடையும்
கந்தகாயம் புள்ளகடையும் தெய்வத்
தொகுதிக்குகந்த வெற்றிவேர் துன்னுங்கடையும் (94)
வேண்டிய மலர் வகைகள் மிகுந்துறும் பெண்ணே
மற்றுங்கடை விளம்புறேன் மின்னே
கேட்டு மிக்களிப்பை யொக்கமருவிவேண்டுவாய் கண்ணே
காண்டலுக்கினிய நற்றேங்காய்க்கடையும்
பிலாமாங் காயிக்கடையும்
கத்திரி வாழைபீர்க்கனவரைக்காயிக்கடையும் (96)
பூசணிபுடலன் பச்சை மொச்சைக்காய்களும்
அழகினுமிச்சைக்காய்களும் நல்ல
பூவையே நமக்கு வேண்டுமிச்சைக்காய்களும் [97]
பேசருமனந்த சுவைப்பெருங்கனிக்கடை
கனியொடு கரும்பு நற்கடை உண்டு
பெண்மணியே சொல்லச்சொல்ல பெருகுமேகடை (98)
தொண்ணூற்றாறு வர்ணத்தார்கள் துலங்கு நன்மடம்
தச தர்மம் இலங்கு நீண்மடம் தெய்வ
தொண்டர்கள் விளங்குகின்ற தொன்றுசேர் மடம் (99)
மண்ணில்மன்னர்களாலே வைத்த ராஜாங்க
நிபந்தனை வகைவகையோங்கப் பெற்ற
மாடகூட மாளிகை தர்பாருண்டு காண்க (100)
நாடுடனகர் வளத்தை நாயகிகேட்டாய்
மனதின்பத் தோய்விலே மீட்டாய் இனி
நம்மாசிகம் பச்சிளை நவில்கிறேன் பாட்டாய் (101)
பெண்:— கூடியே கலந்துவாழும் கொழுநனே நாதா
மனதின்பைக் கொடுத்தவா நீதா ஆனால்
கோதை மகமாயிகம்பக் கோ[illegible] (102)

முதற்பாகம் முற்றுப்பெற்றது.

ஸ்ரீ பழனி மாரியம்ம சகாயம்.

144891